In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.157/2021 | Prosecution witness P.W.9 |
| Name: Deviga | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது எட்டிக்குளத்துப்பட்டியில் வசிக்கிறேன். அசா7 என் அப்பா. அசா8 என் அம்மா. சம்பவத்தில் இறந்த சிவக்குமார் என் தம்பி. நான் என் அம்மா வீட்டிற்கு அன்றைய தினம் காலை வந்திருந்தேன். 10.01.2019 ம் தேதி என் தம்பி சிவக்குமார் அவரது நண்பர் ஹரிஹரன் வீட்டிற்குச் செல்வதாக சொல்லிச் சென்றான். அன்று இரவு 8, 8.30 மணிக்கு நான் எட்டிக்குளத்துப்பட்டிக்குச் சென்றுவிட்டேன். அன்று இரவு 10.45 மணியளவில் என் அப்பா போன் செய்து என் தம்பிக்கு ஏதோ ஆகிவிட்டதாகவும், திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருப்பதாகவும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வரச்சொன்னார். நான் நேரடியாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு இரவு 11 மணிக்கு சென்று விட்டேன். அங்கு என் அப்பாவிடம் என்ன நடந்தது என நான் விசாரித்தற்கு என் அப்பா என்னிடம் ஹரிஹரனும், அவரது அப்பாவும் என் தம்பியை கூட்டிப்போனதாகவும், ஹரிஹரனின் அப்பா நாகமாணிக்கக்கல்லை வாங்குவதற்கு ரூ.50000 ம் கொடுத்திருந்ததாகவும், அதை யாரோ பறித்துக்கொண்டு போனதாகவும் திரும்ப கேட்டபோது அந்த கல்லை கருஞ்சாமி என்ற முருகன் வைத்திருந்ததாகவும், மறுபடியும் அவர்களை தேடி கேட்டு மீண்டும் ரூ.1 லட்சம் கொடுத்ததாகவும், மறுபடியும் நாகரத்தினக்கல்லை கொடுப்பதற்கு பதிலாக பாசியைக் கொடுத்து ஏமாற்றியதாகவும், மறுபடியும் தேடி கண்டுபிடித்துக் கேட்டபோது இந்த பணம் பத்தாது, இன்னும் ரூ.1,50,000 தரும்படி கேட்டதாகவும், மறுபடியும்

அந்த ரூபாயை கொடுக்கப்போகும்போதுன் என் தம்பியை அவர்களுடன் கூட்டிப் போனதாகவும், மாமரத்துப்பட்டியில் கரந்தன் தோட்டத்திற்கு போனதாகவும், அங்கு போனவுடன் பணத்தை வாங்கிக்கொண்டு கல்லைக் கொடுத்ததாகவும், அதற்கு இடையில் வாய்த் தகராறு ஏற்பட்டு கருஞ்சாமி என்பவர் என் தம்பியை கத்தியால் குத்தப் போனபோது கத்தி கீழே விழுந்ததை என் தம்பி சிவக்குமார் எடுத்து கருஞ்சாமியின் தொடையில் குத்தி விட்டதாகவும், அதனால் ஆத்திரமடைந்து கருஞ்சாமி கத்தியை எடுத்து என் தம்பியின் வலது பக்க முதுகில் குத்திவிட்டதாகவும், கல்லை பிடுங்கிக்கொண்டு அவர்கள் ஓடிவிட்டதாகவும் சிவாவை ஏற்றிக்கொண்டு முதலில் அதிகாரிபட்டிக்கும் பின்னர் சிலுவத்தூர் மருத்துவமனைக்கும் அதன் பின்னர் திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கும் கொண்டு வந்ததாகவும் சொன்னதாக என்னிடம் சொன்னார். அன்றைய தினம் இரவில் என் தம்பியை ஆஸ்பத்திரியில் வைத்து பார்க்க முடியவில்லை. மார்ச்சுவரியில் வைத்து இருந்தார்கள். மறுநாள் காலை ஜன்னல் வழியாக பார்த்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

மேற்சொன்ன சங்கதிகள் அனைத்தும் என் அப்பா என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:57:27 +0530

Principal District Judge,
Dindigul.